# விரலைச் சுட்டிக்காட்டுவதே நபி வழி!
# ஆட்டுவது நபி வழி அல்ல.

**கலாநிதி யூ.எல்.ஏ. அஷ்ரப்** Ph.D., Al-Azhar.
**தலைவர்–தாருல் ஹதீஸ், உதவிப் பேராசிரியர், மன்னர் காலித் பல்கலைக்கழகம், சவூதி அரேபியா.**

பல ஆதாரபூர்வமான ஹதீஸ்கள், தஷஹ்ஹுத் (அத்தஹிய்யாத்) இருப்பில் வலது தொடையில் கையை வைத்து சுட்டுவிரலால் சுட்டிக்காட்ட வேண்டும் என அறிவிக்கின்றன. அவைகளில் இரண்டு ஹதீஸ்கள் பின்வருமாறு:

**(1)** روى مسلم فى صحيحه 81/5 –كتاب المساجد– باب صفة الجلوس فى الصلاة برقم: 1307 ، وأبوداود فى سننه 369/1 – كتاب الصلاة – باب الإشارة فى التشهد برقم: 988 ، والنسائى فى سننه 39/3 –كتاب السهو– باب موضع البصر عند الإشارة وتحريك السبابة ، برقم: 1274 من طريق عثمان بن حكيم ، حدثني عامر بن عبدالله بن الزبير عن أبيه قال:كان رسول الله –صلى الله عليه وسلم– إذا قعد فى الصلاة جعل قدمه اليسرى بين فخذه وساقه ؛ وفرش قدمه اليمنى؛ ووضع يده اليسرى على ركبته اليسرى ؛ ووضع يده اليمنى على فخذه اليمنى ؛ **وأشار بأصبعه**.

1. நபி(ஸல்) அவர்கள் தொழுகையில் அமர்ந்தால், தனது இடது பாதத்தை தனது தொடைக்கும் கணைக் காலுக்குமிடையில் வைத்துக்கொண்டு, வலது பாதத்தை விரித்துக் கொள்வார்கள். தனது இடது கையை இடது முட்டுக்காலில் வைத்துக் கொள்வார்கள், வலது கையை வலது தொடையில் வைத்துக் கொள்வார்கள். தனது சுட்டுவிரலால் சுட்டிக் காட்டுவார்கள் என அப்துல்லாஹ் இப்னு ஸுபைர்(ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

(முஸ்லிம்:1310)

(2) روى مسلم ( 1311) من طريق مالك عن مسلم بن ابي مريم عن علي بن عبد الرحمن المعاوي عن ابن عمر–رضي الله عنهما –قال : كان النبي – صلى الله عليه وسلم إذا جلس في الصلاة وضع كفه اليمنى على فخذه اليمنى وقبض أصابعه كلها وأشار بإصبعه التي تلي الإبهام ووضع كفه اليسرى على فخذه اليسرى.

2. நபி(ஸல்) அவர்கள் தொழுகையில் அமர்ந்தால், தனது வலது கரத்தை வலது தொடையில் வைத்து, எல்லா விரல்களையும் மடித்துக் கொண்டு பெருவிரலுக்கு அடுத்துள்ள விரலால் சுட்டிக்காட்டுவார்கள். தனது இடது கரத்தை வலது தொடையில் வைத்துக் கொள்வார்கள் என அப்துல்லாஹ் இப்னு உமர் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

(முஸ்லிம்:1311)

இவ்விரு ஹதீஸ்களிலும் விரலை சுட்டிக் காட்டுவது குறிப்பிடப்பட்டுள்ளது. அதுவே நபி வழியாகும். விரலை ஆட்டுவது கூறப்பட வில்லை. எனவே அது நபிவழியல்ல.

**விரல் ஆட்டுவதற்குரிய ஆதாரமும் அதற்கான மறுப்பும்:**

விரலாட்டுவதை ஆதரிப்பவர்கள் பின்வரும் ஒரே ஹதீஸையே ஆதாரமாக முன் வைக்கிறார்கள்:

روى أبو داود في سننه ( 727 ) ولم يسق لفظه بتمامه ، والنسائى فى سننه 43/3 –كتاب السهو – باب قبض الثنتين من أصابع اليد اليمنى وعقد الوسطى والإبهام منها – برقم : 1267 ، وابن خزيمة في صحيحه 376/1 برقم :714 ، وابن حبان في صحيحه ( الاحسان 5/ 171 برقم 1860 ) من طريق **زائدة بن قدامة** عن عاصم بن كليب عن أبيه **عن وائل بن حجر – رضى الله عنه** – قال: قلت : لأنظرن إلى صلاة رسول الله صلى الله عليه وسلم كيف يصلي؟ فنظرت إليه فوصف ، قال: ثم قعد وافترش رجله اليسرى ووضع كفه اليسرى على فخذه وركبته اليسرى وجعل **حد مرفقه الأيمن** على فخذه اليمنى ثم قبض اثنتين من أصابعه **وحلق حلقة** ثم رفع أصبعه فرأيته **يحركها يدعو بها**.

“நபி(ஸல்) அவர்கள் எவ்வாறு தொழுதார்கள் என்பதை அவதானிக்க வேண்டுமென கூறிக் கொண்டு அவதானிக்க ஆரம்பித்தேன்... பின்பு நபி(ஸல்) அவர்கள் அமர்ந்து இடது காலை விரிப்பாக்கிக் கொண்டு தனது இடது உள்ளங் கையை இடது தொடை மீதும், முட்டுக்கால் மீதும் வைத்தார்கள். தமது வலது முழங்கையை வலது தொடை மீதும் வைத்தார்கள். பின்பு தனது விரல்களில் இரண்டை (நடு விரலையும், பெரு விரலையும்) மடக்கிக் கொண்டு வளையம் போல் அமைத்துக் கொண்டார்கள். பின்பு (சுட்டு) விரலை உயர்த்தி ஆட்டியவர்களாக பிரார்த்திக்கக் கண்டேன் என்று வாயில் பின் ஹுஜ்ர்(ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

(நஸாஈ: 1267)

இந்த ஹதீஸில், காணப்படும் “ஆட்டியவர் களாக” என்ற சொல் ஸாயிதா இப்னு குதாமா என்பவரினால் தவறுதலாக செருகப்பட்ட தாகும். அதாவது வாயில் பின் ஹுஜ்ர்(ரழி)

அல்லாஹ்வை விட நாங்களே விளக்கும் ஆற்றல் மிக்கவர்கள் என ஆணவம் பேசுகிறவர்களே!!

(وائل بن حجر) அவர்கள், நபி(ஸல்) தொழு கின்ற முறையை வர்ணிக்கிறார்கள். இந்த ஹதீஸை வாயில் பின் ஹுஜ்ர்(ரழி) அவர்களிடமிருந்து குலைப் (كليب) என்பார் பெறுகின்றார்கள். குலைப் என்பவரிடமிருந்து, ஆஸிம் (عاصم) என்பவர் அதே ஹதீஸை பெறுகின்றார். ஆஸிம் என்பவரிடமிருந்து இந்த ஹதீஸை 14 பேர் பெறுகிறார்கள். அந்த 14 பேரில், நபி(ஸல்) அவர்கள் அத்தஹிய்யாத் (தஷஹ்ஹுத்) இருப்பில் சுட்டு விரலால் சுட்டிக் காட்டினார்கள் என 13 அறிவிப்பாளர்கள் கூறுகிறார்கள். 14வது நபராகிய ஸாயிதா பின் குதாமா (زائدة بن قدامة) என்பவர் மட்டுமே, நபி (ஸல்) அவர்கள் சுட்டு விரலை ஆட்டினார்கள் எனக் கூறுகிறார்கள்.

ஸாயிதா என்பவரின் இந்த அறிவிப்பு "ஷாஃத்" (الشاذ) என்ற தகவல் முரண்பட்ட பலயீனமான ஹதீஸில் அடங்கும். "ஷாஃத்" என்றால் நம்பகமான ஒரு அறிவிப்பாளர், ஞாபக சக்தியில் தன்னைவிட கூடிய ஒருவர் அல்லது எண்ணிக்கையில் கூடியவர்களின் தகவலுக்கு முரணாக ஒரு செய்தியை அறிவிப்பதாகும். இவ்வாறு முரண்பட்ட அறிவிப்பை ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்த ஹதீஸ் விதிக்கு அமைய, ஸாயிதா என்பவர் தன்னை விட ஞாபகத்திலும், எண்ணிக்கையிலும் கூடிய 13 பேரின் ரிவாயத்துக்களுடன் முரண்படுகிறார். எனவே, நபி (ஸல்) அவர்கள், சுட்டு விரலை ஆட்டினார்கள் என்ற ஸாயிதாவின் ரிவாயத் "ஷாஃத்" (الشاذ) என்ற பலயீனமான ஹதீஸ் ஆகும். நபி(ஸல்) அவர்கள் சுட்டு விரலால் சுட்டிக்காட்டினார் என்பதுதான் ஊர்ஜிதமான ரிவாயத் ஆகும். ஸாஇதா என்பவர் தனது ஆசானிடம் பெற்ற "சுட்டிக்காட்டினார்கள்" என்ற சொல்லுக்குப் பதிலாக "ஆட்டினார்கள்" என்ற பதத்தை தவறுதலாக பிரயோகித்துள்ளார்கள்.

நபி(ஸல்) அவர்கள் சில நேரம் ஆட்டுபவர்களாகவும், இன்னும் சில நேரங்களில் சுட்டிக் காட்டுபவர்களாகவும் இருந்தார்கள் என்று கூற முடியாது. ஏனெனில் இங்கு ஒரு ஹதீஸை பல அறிவிப்பாளர்கள் வேறுபட்ட முறையில் அறிவித்திருக்கிறார்கள். இச் சந்தர்ப்பத்தில் ஒன்றை விட்டு, ஒன்றை எடுக்க வேண்டுமே தவிர இரண்டையும் எடுக்க முடியாது. ஆனால், ஒரே ஹதீஸாக இல்லாது, இரண்டு ஸஹாபிகள் மூலமாக இரண்டு ஹதீஸ்கள் வந்திருந்தால் இரண்டு முறைகளும் (ஆட்டுதலும், சுட்டிக் காட்டுதலும்) ஆகும் எனக் கூறலாம். ஆனால், இங்கு அவ்வாறல்ல, ஒரு ஸஹாபி அறிவித்த ஹதீஸை 13 பேர் ஒரு விதமாகவும், ஒரு நபர் வேறுவிதமாகவும் அறிவிக்கிறார்கள். எனவே இரண்டில் ஒன்றை மட்டும் தான் எடுக்க வேண்டும்.

(பார்க்க: شرح علل الترمذي لابن رجب والنكت وشرح النخبة لابن حجر)

இந்த அடிப்படையில் "சுட்டிக்காட்டினார்கள்" என்பது ஊர்ஜிதமான அறிவிப்பும் "ஆட்டினார்கள்" என்பது பலவீனமான அறிவிப்பு மாகும்.

## சுட்டிக்காட்டுவதை ஊர்ஜிதப்படுத்தும், ஆட்டுவதை பலவீனப்படுத்தும் மேலதிக ஆதாரங்கள்....

சுட்டிக்காட்டுவதை பின்வரும் ஆதாரங்கள் உறுதிப்படுத்துகின்றன.

1. அப்துல்லாஹ் இப்னு ஸுபைர்(ரழி), அப்துல்லாஹ் இப்னு உமர்(ரழி) போன்ற ஸஹாபாக்கள் நபி(ஸல்) அவர்களின் தொழும் முறையை விபரித்து அறிவிக்கும் ரிவாயத்துகளில் சுட்டிக்காட்டுதல் (الإشارة) என்ற சொல்லே காணப்படுகிறது. அந்த ரிவாயத்துகளை அடிப்படையாகக் கொண்டே ஹதீஸ் கலை வல்லுனர்கள் உட்பட பெரும்பாலான அறிஞர்கள் அத்தஹிய்யாத்தில் சுட்டிக்காட்ட வெண்டுமென்றே கூறியுள்ளனர்.

2. வாயில் இப்னு ஹுஜ்ர்(ரழி) அவர்களது ஹதீஸின் அறிவிப்பில் "பிரார்த்திப்பதற்காக தங்களது விரலை நாட்டினார்கள்" (ونصب أصبعه للدعاء) எனக் காணப்படுகிறது. (நஸாஈ: 1158, முஸ்னத் அல்-ஹுமைதி: 648) ஆட்டுவதை ஆதரிப்பவர்கள் "நாட்டினார்கள்" என்ற அறிவிப்பிற்கு விடை கூறாமல் நழுவிக்கொள்கிறார்கள்.

அப்துல்லாஹ் இப்னு உமர்(ரழி) அவர்களின் அறிவிப்பிலும் "நபி(ஸல்) அவர்கள் நாட்டினார்கள்" என்றே வந்துள்ளது. (அத்-தாரிமி: 1313)

அல்ஹதீஸ் உங்களுக்கு விளங்காது; நாங்களே விளக்குகிறோம் என்று கூறும் மவ்லவிகள்!

இவ்வறிவிப்புக்கள் மூலம் பலம் பெரும் ஹுபாப் இப்னு ஈஃமா (خفاف بن ايماء) (ரழி) அவர்கள் அறிவிக்கும் பலவீனமான ஹதீஸ் ஒன்றிலும் நாட்டினார்கள் எனக் காணப்படுகிறது. (பார்க்க: முஸ்னத் அஹ்மத்– 16572, முஸ்னத் அபீயஃலா:908, அத்தபரானி: 4176, மஜ்மஃ அஸ்ஸவாஇத்:2843)

3. ஸாயிதா அவர்கள் தவறுதலாக அறிவிக்கும் ரிவாயத்தில் காணப்படும் ஆட்டினார்கள் என்ற சொல், ஊர்ஜிதமான வேறு எந்த அறிவிப்பிலும் கிடையாது.

4. முன்னோர்களாகிய ஸஹாபாக்கள், தாபிஈன்கள் ஆகியோர்களில் எவராவது அத்தஹிய்யாத்தில் விரலாட்டியதாக ஊர்ஜித மான தகவல்கள் எதுவும் கிடையாது.

**சுட்டிக்காட்டுதல் என்ற சொல்லில் ஆட்டுதல் என்ற கருத்து உள்ளதா?**

சிலர் சுட்டிக்காட்டும் போது சில நேரங்களில் ஆட்டமும் ஏற்படலாம் என்றும் ஹதீஸில் காணப்படும் சுட்டிக்காட்டுதல் என்ற சொல்லுக்கு ஆட்டுதல் என்ற கருத்தை வழங்கலாம் என்றும் வாதிடுகின்றனர். இந்த வாதம் தவறானதாகும். ஏனெனில் சுட்டிக்காட்டுதல் என்ற சொல்லில் அடிப்படையாக ஆட்டுதல் என்ற பொருள் கிடையாது. சில நேரங்களில் ஆட்டுதல் என்ற பொருள் சேர்ந்து கொள்ளும் என்றால், அதற்குரிய சந்தர்ப்ப சூழ்நிலை (القرائن) இருக்க வேண்டும். அச்சந்தர்ப்பம் இங்கே கிடையாது. ஏனென்றால் தொழுபவர் அத்தஹிய்யாத் (தஷஹ்ஹுத்) இருப்பில், முழங்காலில் மணிக்கட்டை வைத்து பெரு விரல், சுட்டுவிரல் தவிர ஏனைய விரல்களை மடித்து பெரு விரலை சுட்டு விரலின் கீழ் வைத்து சுட்டிக்காட்டும்போது ஆட்டுதல் என்பதற்கு இடம்பாடு இல்லை. ஆட்டுவதாயின், சுட்டிக்காட்டினார்கள். ஆட்டினார்கள் என்று இரண்டும் ஒரே ரிவாயத்தில் கூறப்பட வேண்டும். அவ்வாறு இங்கு கூறப்படவில்லை. எனவே சுட்டிக்காட்டினார்கள் என்பதுடன், ஆட்டுதல் இங்கே ஏற்படுவதற்கு சந்தர்ப்பம் இல்லை.

விரலை ஆட்ட வேண்டும் எனக்கூறிய பிற்காலத்து அறிஞர்கள் சுட்டிக்காட்டினார்கள் என்ற ரிவாயத்தை தங்களது கருத்துக்கு ஆதாரமாகக் கொள்ளவில்லை என்பது, சுட்டிக்காட்டினார்கள் என்பதற்கு ஆட்டினார்கள் என்ற கருத்து கிடையாது என்பதற்கு நல்லதொரு சான்றாகும்.

ஹதீஸ் கலை அறிஞர்கள் தங்களது நூற்களில் அத்தஹிய்யாத்து சம்பந்தமாக தலைப்புக்கள் இடும்போது, சுட்டிக்காட்டுதல் வேறு. ஆட்டுதல் வேறு என்றே வேறுபடுத்திக்காட்டி உள்ளனர். உதாரணமாக இமாம் நஸாஈ (ரஹ்) அவர்கள் பின்வருமாறு தலைப்பிட்டிருக்கிறார்கள்.

**موضع البصر عند الإشارة وتحريك السبابة**

**சுட்டிக்காட்டும் பொழுதும், சுட்டு விரலை ஆட்டும் பொழுதும் பார்வை இருக்கவேண்டிய இடம்**

இங்கே இமாம் நஸாஈ அவர்கள் சுட்டிக்காட்டுதல் வேறு, ஆட்டுதல் வேறு என்பதை தெளிவு படுத்தியுள்ளார்கள்.

மேலும் இமாம் இப்னு ஹுஸைமா(ரஹ்) அவர்கள் பின்வருமாறு தலைப்பிட்டிருக்கிறார்கள்.

**باب صفة وضع اليدين على الركبتين في التشهد وتحريك السبابة عند الإشارة بها**

**சுட்டுவிரலால் சுட்டிக்காட்டும் பொழுது அதை ஆட்டுதல்**

இங்கே இமாம் இப்னு ஹுஸைமா அவர்கள் சுட்டிக்காட்டுதல், ஆட்டுதல் இரண்டையும் வேறுபடுத்திக்காட்டியுள்ளார்கள்.

மேலும் இமாம் நவவி அவர்கள் ஷர்ஹுல் முஹத்தப் : 2/454 என்ற நூலில் அத்தஹிய்யாத் சம்பந்தமாக பேசும்பொழுது பின்வருமாறு கூறுகிறார்கள்.

**وهل يحركها عند الرفع بالإشارة؟**

**சுட்டிக்காட்டி உயர்த்துமிடத்தில் விரலை ஆட்ட வேண்டுமா?**

இங்கே இமாம் நவவி அவர்கள் சுட்டிக்காட்டுதலையும், ஆட்டுவதையும் வேறுபடுத்திக் கூறியுள்ளார்கள்.

**ஹதீஸுக்கு நகைச்சுவையான மொழி பெயர்ப்பும் அதற்குரிய மறுப்பும்**

விரலாட்டுவதை ஆதரிக்கும் தமிழ் நாட்டு

நபி(ஸல்) அவர்களைவிட நாங்களே விளக்கும் ஆற்றல் மிக்கவர்கள் என அகந்தை பேசுகிறவர்களே!

சகோதரர் ஒருவர் விரலாட்டினார்கள் எனக் கூறும் பலவீனமான ஹதீஸில் காணப்படும் வாக்கியத்துக்கு தவறான மொழி பெயர்ப்பை வழங்கியுள்ளார். அதை சில மதரஸா மாணவர்களும் நம்பி ஏமாந்துவிட்டார்கள். அதாவது மேற்படி ஹதீஸில் காணப்படும் "يدعو بها" என்ற வாக்கியத்திற்கு "(யாரையோ) அழைப்பது போன்று" என மொழிபெயர்த்துள்ளார். இது மாபெரும் தவறாகும். இது அவரின் அரபுப் பாஷை பற்றிய அறிவின்மையையும், ஹதீஸின் ஏனைய ரிவாயத்துகள் பற்றிய அறிவின்மையையும் அப்பட்டமாக்குகின்றது.

**يدعو بها** என்ற வாக்கியம் "சுட்டு விரலால் பிரார்த்தித்தவர்களாக" என்று தான் மொழி பெயர்க்கப்பட வேண்டும். அதற்குரிய ஆதாரங்கள் பின்வருமாறு:

1. இமாம் நஸஈ அவர்களின் அறிவிப்பில் "ونصب أصبعه للدعاء" (பிரார்த்தனைக்காக தனது விரலை நாட்டினார்கள்) என்றும் இமாம் ஹுமைதி அவர்களின் ரிவாயத்தில் "ودعا هكذا ونصب الحميدي السبابة" இவ்வாறுதான் பிரார்த்தித்தார்கள் எனக்கூறி ஹுமைதி சுட்டுவிரலை நாட்டினார்கள் என்றும் காணப்படுகின்றது.

2. அப்துல்லாஹ் இப்னு இத்ரீஸ் என்பவரின் அறவிப்பில் ورفع التي تليها يدعو بها في التشهد (பெருவிரலுக்கு அடுத்த விரலை உயர்த்தி அதைக் கொண்டு பிரார்த்தித்தவர்களாக) எனக் காணப்படுகிறு.

3. இப்னு உமர்(ரழி) அவர்களின் அறிவிப்பில்

ورفع أصبعه اليمنى التي تلى الإبهام فدعا بها

(பெருவிரலுக்கு அடுத்து விரலை உயர்த்தி அதைக் கொண்டு பிரார்த்தித்தார்கள் எனக் காணப்படுகிறது. (முஸ்லிம் : 1309)

இவைகளிலிருந்து **يدعو** என்ற சொல்லுக்கு பிரார்த்தித்தவர்களாக என்ற கருத்தே தவிர யாரையோ அழைப்பது போல் என்ற அர்த்தம் அல்ல. நன்றி: தாருல் ஹதீஸ், இலங்கை.

**ஆசிரியர் குறிப்பு:** தொழுகை இருப்பில் விரலாட்டுவது நான்கு மத்ஹபுகளில் ஒன்றான ஹன்பலி மத்ஹபில் நடைமுறையில் இருக்கிறது. சவுதி அரசு ஹன்பலி மத்ஹபை நடைமுறைப்படுத்துவதால் அங்கு பெரும்பாலும் தொழுகையில் விரலாட்டப்படுகிறது. இப்னு பாசும், அல்பானியும் கூட விரலாட்டுவதைச் சரிகண்டு எழுதியுள்ளனர். அந்த அடிப்படையிலும், சமுதாயத்தில் குழப்பத்தை ஏற்படுத்தி பிளவு படுத்திப் போட்டிப் பள்ளிகள் கட்டி (மஸ்ஜிதன்ழிரார்) தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டி உலகியல் ஆதாயம் அடையும் தீய நோக்குடனும் தான் நம்மூர் ஜாக், ததஜ போன்றோரும் விரலாட்டுவதைத் தீவிரமாகச் சரிகண்டு செயல்படுத்துவதோடு, அதற்காகத் தங்களின் சொத்தை வாதங்களையும், அபத்தமான சுயவிளக்கங்களையும் கொடுத்து வருகிறார்கள். அதைத்தான் இலங்கைச் சகோதரர் யூ.எல்.ஏ. அஷ்ரப் குறிப்பிட்டுள்ளார்.

விரலாட்டுவது பற்றி எத்தனை ஹதீஃத்கள், எந்தெந்த முறையில், எத்தனை நூல்களில் இடம் பெற்றிருந்தாலும் அவை அனைத்தும் ஆசிம் பின் குலைப் வழியாகவே வருகின்றன. அவர் இடம் பெறாத ஒரேயொரு அறிவிப்புத் தொடரும் இல்லை. அவர் இடம் பெறாத வேறு அறிவிப்பாளர் வரிசை இல்லாமல், அவர் இடம் பெறும் அறிவிப்புத் தொடர் மட்டும் இருந்தால், அதை எடுத்து நடப்பது கூடாது என பிரபல்யமான ஹதீஃத் கலாவல்லுனர் இப்னுல் மதீனீ அறிவித்துள்ளார்.

அதற்கு அவர் காரணம் சொல்லவில்லை என்ற வாதம் வீண் வாதம். காரணம் ஒரு ஹதீஃத் கலாவல்லுநர் இப்படி அறிவித்திருப்பதால் அந்த ஹதீஃத்கள் அனைத்தும் சந்தேகத்திற்குரியவை ஆகிவிட்டன. அல்குர்ஆன் 17:36 சந்தேகமானதை எடுத்து நடக்கக் கூடாது என்ற கண்டிப்பதும், புகாரீ வியாபாரம் பாடத்தில் சந்தேகமானதை விட்டு சந்தேகமற்றதின் பால் சென்று விடு என்ற கட்டளையும் சந்தேகமான விரலாட்டலைத் தடுக்கின்றன.

"இஷாரா"– சமிக்கையிலும், ஒரு விஷயத்தை விரலை நீட்டி உணர்த்துவது போல், விரலை ஆட்டியும் உணர்த்தலாம் என்ற வாதமும் தவறாகும். காரணம் தொழுகை இருப்பில் விரலசைத்து யாரையும் கூப்பிட முடியாது. கூப்பிடுவது போல் என்று ஹதீஃதிலும் இல்லை. அதற்கு மாறாக நஸாயீயில் கிப்லாவை நோக்கி இஷாரா என்றிருப்பதால் அது நீட்டிச் சுட்டிக் காட்டுவதை மட்டுமே குறிக்கிறது.

2:186, 7:3, 33:36,66,67,68, 50:16 இறைக் கட்டளைகள்படி மவ்லவிகள் அல்லாஹ்வுக்கும்